DVMunnuDw

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண். 146/2021</u>

**2022–ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. விஜயா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிதம்பரம் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : ராமசாமி | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : நன்னை | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 66/2022 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் இதற்கு முன்பு கிராம நிர்வாக அலுவலராக பணி செய்தேன் என்றால் சரிதான். நான் ஒய்வு பெற்று 7 ஆண்டுகள் ஆகிறது. தற்சமயம் நான் நன்னையில் குடியிருந்து வருகிறேன். ஏற்கனவே தொழுதூரில் குடியிருந்தேன். 2ம் பிரதிவாதி மதியழகன் எனது சித்தப்பா ஆவார். அவருக்கும் சேர்த்து தான் எதிர் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி செங்கமலை எனக்கு சித்தப்பா ஆவார். எனது அப்பா பெயரும் ராமசாமி உடையார். 1ம் பிரதிவாதியின் அப்பா பெயரும் ராமசாமி உடையார் என்றால் சரிதான். ஆனால் இரண்டு பேரும் வெவ்வேறு நபர்கள் ஆவார்கள்.
2) 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் தனியாக வழக்கறிஞர் வைத்து கட்சி செய்து வருகிறார் என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான மூல ஆவணங்களை எனது அப்பா பெயரிலும், பாட்டனார் பெயரிலும் உள்ளதை 1ம் பிரதிவாதியான எனது சித்தப்பா தாக்கல் செய்துள்ளார்.
3) எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் உள்ள கூட்டு குடும்ப சொத்துக்களை நாங்கள் ஏற்கனவே பாகம் பிரித்துக் கொண்டோம். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டோம். எனது அப்பா சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது அப்பாவின் பாட்டனார் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்.

4) அந்த ஆவணங்களில் உள்ள நான்கெல்லை மற்றும் பரப்பு தாவா சொத்தோடு ஒத்து போகிறது. அந்த ஆவணத்தின் அடிப்படையில் எனது தாத்தா பெயரிலோ அல்லது எனது அப்பா பெயரிலோ பட்டா ஏற்பட்டதா என்றால் மேற்படி இடம் நத்தம் என்பதால் பட்டா வழங்கப்படவில்லை. மேற்படி 1905 ஆம் வருட கிரய ஆவணத்தை யார் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் அப்புசாமி என்பவர் எழுதிக் கொடுத்துள்ளார்.

5) அப்புசாமி பெயரிலாவது பட்டா ஏற்பட்டிருந்ததா என்றால் தாவா இடம் நத்தம் என்பதால் பட்டா வழங்கப்படவில்லை. இந்த கிரய பத்திரம் குறித்து நான் எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையில் தாவா சொத்தை தான் மட்டும் அனுபவித்து வருவதாகவும், வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் தாவா சொத்தை தான் அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். இதில் யார் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நாங்கள் மூவரும் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறோம்.

6) எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்த வழக்கும் இல்லை. நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டதற்கான பாக அட்டவணை பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்படாத பாக அட்டவணை மூலம் நாங்கள் சொத்தை பிரித்துக் கொண்டோம். நான் எனக்கு பிரிந்த சொத்துக்கள் குறித்து எனது வாரிசுகளுக்கு ஆவணம் ஏதும் ஏற்படுத்தவில்லை. 1ம் பிரதிவாதி அவருக்கு பிரிந்த சொத்துக்களை அவரது வாரிசுகளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த விபரம் பற்றி எனக்கு தெரியாது.

7) தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நான் வாங்கி பார்க்கவில்லை. நானும், எனது அண்ணனும் கிராம நிர்வாக அலுவலராக இருந்ததை பயன்படுத்தி எங்களது பெயரில் பட்டா ஏற்படுத்திக் கொண்டு, வாதியின் அனுபவத்தை இடையூறு செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

8) தாவா சொத்துள்ள கிராமத்தில் நாங்கள் குடியிருக்கவில்லை என்றாலும், பொய்யான ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டு, வாதியின் அனுபவத்தை இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இருக்கும் போது, அது குறித்து நாங்கள் எதிர் கோரிக்கை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். இது குறித்து நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். கேவியட் மனு வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் நாங்கள் பரிகாரம் கோரவில்லை.

9) 1ம் பிரதிவாதி கிரய ஆவணத்தின் அடிப்படையிலும், நீங்கள் பட்டாவின் அடிப்படையிலும் தாவா சொத்தை உரிமை கோருவது ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் சீட் உள்ள கட்டிடத்திற்கு நான் வரி ஏதும் செலுத்தவில்லை. கேவியட் வாங்கியதற்கு பிறகு தான் வாதி அந்த இடத்தில் கட்டிடம் கட்டி அனுபவம் செய்து வருகிறார்.

10) தற்போது வரை வாதி தான் அந்த இடத்தில் மாட்டுபட்டி வைத்து வருகிறார் என்றால் தற்போது வாதி அந்த இடத்தில் இல்லை. பல ஆண்டுகளாக வாதி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், நான் பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தின் அனுபவத்தை கோருகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி வாதிக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

*Sd/-*

District Munsif-cum-Judicial Magistrate,
Kunnam.

DMJM Kunnam